# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) மூலம் தமிழ்நாடு முழுவதும் 6,700 மதுபான சில்லறை விற்பனை கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகே இயங்கி வந்த 132 மதுபானக் கடைகள் பொது மக்கள் மற்றும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, 22.10.2007 அன்று மூடப்பட்டன. சென்னை மண்டலத்தில் 22 மதுபானக் கடைகளும், கோவை மண்டலத்தில் 13 மதுபானக் கடைகளும், மதுரை மண்டலத்தில் 32 மதுபானக் கடைகளும், சேலம் மண்டலத்தில் 33 மதுபானக் கடைகளும், திருச்சி மண்டலத்தில் 32 மதுபானக் கடைகளும், ஆக மொத்தம் 132 மதுபானக் கடைகள் 22.10.2007 அன்று மூடப்பட்டன. இவை தவிர, கடந்த ஆறு மாதங்களில் பொதுமக்கள் ஆட்சேபனையின்பேரிலும், மேற்கண்ட வகையிலும் 82 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளன.

நாள். 23.10.2007.

மேலாண்மை இயக்குநர்
டாஸ்மாக் லிட்.,
சென்னை – 8.